# காவிரி நதி நீர் பகிர்வு

## மாறுபட்ட பார்வையும் அணுகுமுறையும்

காவிரி நதிநீர் பகிர்வு சார்ந்து நாள்தோறும் அரங்கேறி வரும் மோதல்களும், இரு மாநில மக்களுக்கு இடையே வளர்ந்து வரும் மனத்தாங்கல்களும் அனைவரும் அறிந்ததே.இந்த அசாதாரண சூழ்நிலையை கண்டு மனம் வருந்திய அனைவரும் ஒரு குழுவாய் இணைந்துள்ளோம்.

இருமாநிலங்களுக்கு இடையேயான நீர் பகிர்வு சிக்கல் என்று இதனை சுருக்கி பாராமல், ஒரு நதி, அதன் நீர்ப்பிடிப்பு பகுதிகள், அந்நதியின் வடிகால் பகுதிகள் என்று அனைத்தையும் ஒருங்கிணைத்த ஒரு சிக்கலாய் பார்க்க இயலும் என்பதே எங்கள் நம்பிக்கை

சீரிய கொள்கைகளாலும், நதியை சார்ந்த சூழலியல் பற்றிய நுண்புரிதல் மற்றும் சமூக-பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை கருத்தில் கொண்டிருக்கும் ஒருங்கிணைந்த நீர் மேலாண்மை என்பது இயற்கை வளங்களை பாதுகாப்பது மட்டுமல்லாமல் நீடித்த முறையில் பயன்படுத்தவும் வகை செய்யும். மேலும் ஜனநாயக அடிப்படையில் ஆன நீர் மேலாண்மை அனைவருக்கும் நீர் என்பதை உறுதி செய்யும்.

நீர் பகிர்வு கொள்கைகளின் படிநிலைகள் :

1. முதலாவதாக வாழ்விற்கான நீர்: நதியின் வடிநிலம் மற்றும் அதனை சுற்றியுள்ள அணைத்து ஜீவராசிகளும் குடிக்க மற்றும் மக்களின் உணவு , சுகாதாரம் பேண முன்னுரிமை வழங்கப்படும்.
2. இரண்டாவது , சூழலுக்கான நீர் : கடை மடை பகுதி வரை குறைந்தபட்ச நீரோட்டமும் அதன் மூலம் சூழலையும் நீர் வாழ் உயிரினங்களையும் பாதுகாப்பது.
3. மூன்றாவது , வாழ்வாதாரத்திற்கான நீர் : மக்களின் வாழ்வாதாரத்தை இயற்கைக்கும் மக்களின் நலனுக்கும் பாதுகாப்பது.
4. இறுதியாய் ,மாற்றத்தை ஏற்க தேவையான நீர். அஃதாவது எதிர்காலத்தில் நீர் நிலம் மற்றும் பருவ மாற்றத்தால் நிகழ இருக்கும் வளர்ச்சி, அதன் பொருட்டு நதி நீரின் மேல் வரும் தேவை ஆகியவற்றை பூர்த்தி செய்ய தேவையான அளவு.

சமூக-நீர்வள இயல் பற்றிய அறிவியல் புரிதல்:

1. மேற்பரப்பு நீரும் நிலத்தடி நீரும் ஒன்றோடொன்று தொடர்புடையவை . அவற்றை ஒருங்கிணைந்த வளமாய் மட்டுமே கருத இயலும் .
2. நில பயன்பாட்டு மாற்றங்கள் , அளவுக்கதிகமான நிலத்தடி நீர் பயன்பாடு மற்றும் நதியின் வழிகளை திசைதிருப்புதல் போன்ற செயல்பாடுகள் நதியின் நீரோட்டத்தை பாதிக்க கூடியவை. ஆகையால் பங்கீடு என்பது வெறும் மேற்பரப்பில் நதியில் ஓடும் நீர் மட்டுமாகாது.நீரின் அனைத்து வடிவங்களும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.
3. ஒவ்வொரு வருடமும் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் ஏற்படும் மாற்றங்களை(தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவ மழை மாற்றங்கள்)மிக நுட்பமாய் பதிவு செய்தல் வேண்டும். வறட்சி ஆண்டு தீர்வுகள் அதை சார்ந்து இருத்தல் வேண்டும்.பொத்தாம் பொதுவான வறட்சி ஆண்டு தீர்வு பயனளிக்காது.
4. நீர் மேலாண்மை தன்னிச்சையாக செயல்படாது காலநிலை மாற்றங்கள் சார்ந்தே இயங்குகிறது.நிச்சய தன்மையற்ற காலநிலை மாற்றம் அதனால் நீர் மேலாண்மையில் ஏற்படும் விளைவுகளை கருத்தில் கொண்டு நீர் மேலாண்மை நம்பகத்தன்மையை அதிக அளவில்(75%) வைத்திருக்க தேவையிருக்கிறது.மேலும் நம்பகத்தன்மையை குறைந்த சீரிய கால அளவுகளில் கணக்கிட வேண்டும்.

வெளிப்படையான மேலும் மக்கள் பங்களிப்புடன் கூடிய நீர் பகிர்வு முறை:

1. நீர் பகிர்வு மற்றும் நீர் மேலாண்மை ஜனநாயக முறைப்படி அனைத்து மக்களின் பங்களிப்புடன் ஒரு பரவலாக்கப்பட்ட நடைமுறையில் இருத்தல் வேண்டும்.மத்திய அரசும் அதை சார்ந்த அதிகார மையங்களுமே ஆட்சி செய்யும் ஓர் நிகழ்வாய் அது அமையலாகாது.
2. காவிரி சார்ந்த அனைத்து தரவுகளும் நீர்ப்பிடிப்பு பகுதியில் பெய்யும் மழையின் அளவு,பயிரிடப்படும் பயிர்கள்,நிலத்தடி நீர் இருப்பு, போன்ற தகவல்கள் பொது நிதியைக் கொண்டு திரட்டப்பட வேண்டும்.திரட்டிய தரவுகள் அனைவரின் பார்வைக்காகவும் பொதுவில் பகிரப்பட வேண்டும்.
3. மேற்கூறிய தரவுகளை மக்கள் பயன்பாட்டிற்கு உதவும் வகையில் அறிவியல் பூர்வமாய் அலசி அந்த முடிவுகளை மாநில அளவில்

தொடங்கி கிராம பஞ்சாயத்து வரையிலான பல்வேறு நிலைகளுக்கு கொண்டு செல்லல் வேண்டும். இதற்கு துணையாய் மக்கள் , சமூக ஆர்வலர்கள் , கல்வியாளர்கள் மேலும் அரசு சார் நிறுவனங்களை கொண்ட ஓர் உறுதியான கூட்டமைப்பு உருவாக்கப்படல் வேண்டும்.

மனித இனம் தோன்றிய காலத்தில் இருந்தே நீர் வளம் மிக்க பகுதிகளில் தான் மனித நாகரிகம் வளர்ந்து வந்துள்ளது.நதி நீர் விவசாய பயன்பாட்டிற்குத் தான் என்றாலும் கடந்த 100 ஆண்டுகளில் காவிரியும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளும் தொழில்நுட்பத்திலும் பொருளாதாரத்திலும் சமூக அளவிலும் பல மாற்றங்களை அடைந்துள்ளது. இம்மாற்றங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் நதியின் மீதும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலும் பெரும் நெருக்கடியை உருவாக்கியுள்ளது.

இந்நெருக்கடி முறையற்ற, இயற்கைக்கு எதிரான வகையில் நதிநீர் பயன்பாட்டை இட்டுச்செல்கிறது. இதனை இவ்வளவில் நிறுத்தவும் மேலும் கேடு விளையாமல் பாதுகாக்கவும் நீண்ட கால நீர் பாதுகாப்பு பகிர்வு மற்றும் மறுபயன்பாட்டு திட்டங்களும் அவசியம்.

வழக்கறிஞர்கள்,பத்திரிக்கையாளர்கள்,சமூக செயற்பாட்டாளர்கள்,விஞ்ஞானிகள்,கல்வியாளர்கள் என்று பலதரப்பட்ட பின்புலங்களில் இருந்து வந்துள்ள நாங்கள் காவிரி நதி நீர் பங்கீடு என்பதை அரசியல் அதிகார தொழில்நுட்ப சவாலாக பாராமல் இந்நீர் பகிர்வை புதியதோர் கோணத்தில் விசாலமான பார்வையுடன் நீர்ப்பிடிப்பு பகுதி மற்றும் வடிகால் பகுதி ஆகியவற்றையும் இணைத்து பார்க்கவேண்டும் என கருதுகிறோம் . அவ்வாறான பார்வையே இச்சக்கலை தீர்த்து இரு மாநில மக்களின் வாழ்வையும், நதியை சுற்றியுள்ள சூழலையும் காக்கும் என நம்புகிறோம்.

காவிரி நதி நீர் பங்கீட்டு தொடர்பாய் இனி நடக்க இருக்கும் அனைத்து அரசியல் மற்றும் சட்ட முன்னெடுப்புகளில் இவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ள கொள்கைகளும் நீர் பகிர்வு வழிமுறைகளும் கருத்தில் கொள்ளப்படும் என்றும் பரந்துபட்ட சமூக இயக்கங்களுடன் கலந்தாலோசனையுடன் , ஜனநாயக பூர்வமாகவும் , வெளிப்படையாகவும் இத்தீர்வு இனி வரும் காலங்களில் இன்ன பிற நதிநீர் மேலாண்மைகளிலும் விரிவுப்படுத்தப்பட வேண்டும் எனவும் எதிர்பார்க்கிறோம்.

கையெழுத்திட்டவர்கள் :

ஜாய்.கே.ஜே SOPPECOM/Forum

சுமி கிருஷ்ணா, சுயாதீன ஆராய்ச்சியாளர்

சரச்சந்திரா லேலே , ATREE

ஜனகராஜன் எஸ் , MIDS

பரமேஸ்வரன் எம்.பீ, KSSP

ரகு மேனன், CERD/AIPSN

ஜகதீஷ் கிருஷ்ணசாமி ,ATREE

வீனா ஸ்ரீனிவாசன் , ATREE

ஸ்ரீபத் தர்மாதிகாரி , Manthan/Forum

வைத்யநாதன் A , சுயாதீன ஆராய்ச்சியாளர்

பாலாஜி நரசிம்மன் , IITM

சேகர் முட்டு , IISC

நரேந்தர் பாணி NIAS

ஹிமான்ஷு தக்கர் , SANDRP

சக்திவேல் P , TNDALU

நித்யானந்த் ஜெயராமன் Chennai Solidarity Group

பிரகாஷ்.V.S , IITB

பிரகாஷ்.T.N Karnataka Agriculture Prices Commission

ராஜேந்திர.Y.J , PUCAL

ஷாந்தா மோகன் , NIAS

ரவி பல்லா FERAL

ரவி.S.P , நதி ஆராய்ச்சி மையம்

ரமேஷ் M.K , NLSIU

பாரதி கண்ணன் , தண்ணீருக்கான பொது மேடை

தேவிகா தேவ்வையா,Save River Cauvery

சந்திரசேகர்.R.V., PUCAL

நிசர்க் பிரகாஷ் ,NCF

சப்யசாச்சி சாட்டர்ஜி , AIPSN

பிரியங்கா ஜம்வால் , ATREE

பிரஜ்வல் சாஸ்திரி , AIPSN

சுமன் ஜுமானி FERAL

ஸ்ரீநிவாஸ் படிகேர் ATREE

வேதா நூபுரா NLSIU

சுப்ரபா சேஷன் , குருகுல தாவர சரணாலயம்

பிஜோய்.கே.தாமஸ் ATREE

அநித் பசவ்வையா , மென்பொருள் பொறியாளர்

லியோ சல்டான ESG

தருண் நாயர் , ATREE

ஸ்ரீநிவாஸ் சொக்ககுல, CPR

ஜெய்குமார்.H.S., BGVS கர்நாடகா

அர்பிதா நேரா ATREE

மேரி ஆபிரகாம், TERI

அபூர்வா.R ATREE

நகுல் ஹெப்ளே , ATREE

சயன் ராய் , ATREE

ஸ்ரீநிவாஸ் வைத்தியநாதன் , FERAL

லதா.A ,நதி ஆராய்ச்சி மையம்

கங்காதரன்.T , KSSP